Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 75/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-1

| | | | |
|---|---|---|---|
| Name | வேலுச்சாமி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:-</u>**

1. நான் தற்போது ராமபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 5 ஆண்டுகளுக்கு முன்பு உத்தண்டியூரிலுள்ள செல்வ மாரியம்மன் கோயிலிலுள்ள உண்டியலைக் காணவில்லை. பூசாரி ரங்கசாமி சொல்லி இந்தத் தகவல தெரியவந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. நான் ரேகைதான் செய்வேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

1. சம்பவம் குறித்து நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். உண்டியலை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது. உண்டியல் காணாமல்போனது குறித்து பூசாரி 3 நாள் கழித்து கூறினார். போலீசார் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு கையெழுத்து போடத் தெரியாது. கைரேகைத்தான் போடத் தெரியும்.

**<u>மறுவிசாரணை -</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 75/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-2

| | | | |
|---|---|---|---|
| Name | ரங்கசாமி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது ராமபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அண்ணன் ஆவார். 5 ஆண்டுகளுக்கு முன்பு உத்தண்டியூரிலுள்ள செல்வ மாரியம்மன் கோயில் திறந்திருந்தது. கோயில் உண்டியலைக் காணவில்லை. பின்னர் இது சம்மந்தமாக அ.சா.1க்கு நான் தகவல் சொன்னேன். இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. மேற்படி கோயிலுக்கு நானும், மற்றொருவரும் பூசாரி ஆவாம். பெயர் தெரியவில்லை. கோயில் ஊருக்கு மத்தியில் உள்ளது என்றால் சரிதான். கோயிலில் எது நடந்தாலும் பக்கத்திலுள்ளவர்களுக்கு சத்தம் கேட்கும் என்றால் சரிதான். கோயிலிருந்து என்னுடைய வீடு 4 வீடு தள்ளியுள்ளது. உண்டியலை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது.

**மறுவிசாரணை -** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி

படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 75/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-3

| | | | |
|---|---|---|---|
| Name | கன்னியப்பன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:-</u>**

1. நான் தற்போது ராமபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை எங்கு வைத்து எதற்காகப் போட்டேன் என்றால் 5, 6 வருடங்களுக்கு கோயில் உண்டியல் காணாமல்போயிருந்தது. அது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். **குறுக்கு விசாரணை:-**

1. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. சம்பவம் குறித்து எனக்கு போலீஸ் கூறிதான் தெரியும்.

**மறுவிசாரணை -** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 75/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-4

| | | | |
|---|---|---|---|
| Name | ரங்கசாமி | Age | |
| Father/Husband Name | நஞ்சப்பன் | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது ராமபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மாமா ஆவார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு முன்பு கோயிலிருந்த உண்டி காணமல்போயிருந்தது அது சம்மந்தமாக போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. போலீசார் விசாரிக்கும்போது கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது.

**மறுவிசாரணை -** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:–75/2021 Date:– 23.09.2025

Deposition of witness for prosecution :– PW :–5

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகரன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:–**

1. நான் தற்போது ராமாபுரத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. கோயில் நகை திருடுபோனது சம்மந்தமாக காவல்துறை உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள். ஒரு கையெழுத்தை ஸ்டேசனில் வைத்து எதிரியைப் பிடித்த பின்பு கையெழுத்து செய்தேன். மற்றொரு கையெழுத்தை புகார் மனு அளித்த பின்பு போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை:–**

1. கடந்த 19.12.2019–ம் தேதியன்று எதிரியை போலீசார் நீதிமன்ற உத்தரவுப்படி போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்கும்போது எனக்கு தகவல் சொல்லி வரச்சொன்னார்கள் என்றும், போலீசார் விசாரணையில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் நானும் மணி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அதே தேதியன்று தொட்டம்பாளையத்திலுள்ள எதிரியின் பழைய வீட்டின் பக்கமுள்ள முற்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.500/–யை என் முன்னிலையிலும் சாட்சி மணி முன்னிலையிலும் போலீசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு முதல்நிலை சாட்சியத்தில் அதுகுறித்து எதுவும் கூறாமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்துப் போட்டேன். நான் குறுக்கு விசாரணையில் கூறியுள்ள விபரங்களை முதல்நிலை விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் போலீசார் கூறிதான் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.